Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள் சங்.150:1 ஆகஸ்ட் 2020 No.8

ஜெபத்தின் மூலம் தேவனை அறிந்து கொள்ளுதல்
Knowing God through prayer

நாம் எதையோ பெற்றுக் கொள்ள ஜெபிக்கிறோம் என்பதால் நாம் தேவனை சார்ந்து வாழ்கிறோம் என்பது நமது ஜெபத்தின் ஒரு விலையேறப் பெற்ற பகுதி. ஜெபம் தேவனோடுள்ள நமது உறவைக் காண்பிக்கிறது. ஜெபத்தின் மூலம் அவரோடு நாம் பேசுகிறோம். அதன் மூலம் அவரை அறிந்து கொள்ள முடிகிறது. ஜெபத்தின் முக்கிய பலன்கள், தீமையிலிருந்து நாம் விடுதலை பெறுவதும், நாம் விரும்பும் சில காரியங்களைப் பெற்றுக்கொள்வதும், முக்கியமாக தேவனை அறிந்து கொள்ளுவது மாகும்.

"ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" யோவான் *17:3*. ஜெபம் தேவனைக் குறித்து இன்னும் அதிகமதிகமாகக் கண்டுகொள்ளச் செய்வதால் ஆத்துமாவின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாயிருக்கிறது. யோபுவைப் போல "நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாம் என்பதை அறிந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து ....." யோபு.*23:3*.

எப்போதும் முழங்காலில் நிற்கும் கிறிஸ்தவன் அவரைக் கண்டு கொள்வான். அவரும் அவனைக் கண்டு கொள்வார். ஆண்டவராகிய இயேசுவின் தரிசனம் தர்சுவுக்குச் சென்ற சவுலின் கண்களைக் குருடாக்கியது. ஆனால் பின்னர் அவன் எருசலேம் தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருந்த போது தரிசனத்தில் ஆண்டவராகிய இயேசுவைக் கண்டான் அப்.*22:18*. அதன் பிறகு தான் அவன் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளை பெற்றான். காட்சி என்பது தேவபணியில் துணிச்சலுக்கு முன்னோடியாயிருக்கிறது. ஏசாயாவின் வாழ்விலும் இதனையே காண்கிறோம். அவன் தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருந்த போது கண்ட காட்சி : "தேவன் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன்; அவரது வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது" ஏசா.*6:1*. எனவே ஜெபமின்றி தரிசனமில்லை என்பது தெளிவாகிறது. தரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்.

தேவன் மேலேயே உள்ளதாகம்

ஹொரேஸ் புஷ்னெல் என்ற பரிசுத்தவான் ஜெபித்துக் கொண்டிருந்த போது, அவருடைய நண்பர் அருகில் இருந்தார். அவர் தேவனுடைய அருகாமையை உணர்ந்து, "ஹொரேஸ் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு ஜெபித்த போது அந்த இருளில் தேவனுடைய கரம் என்னைத் தொட்டுவிடுமோ எனப் பயந்து என் கரங்களை முடக்கி விட்டேன்" என்று கூறினார். இந்த உணர்வோடுதான் சங்கீதக்காரன் "என் ஆத்துமா தேவனையே நோக்கி அமர்ந்திருக்கிறது" சங்.*62:5* என்கிறார்.

ஜெபம் என்றால் என்ன என்பதை நாம் அறியாதபடியால் நமது ஜெபங்கள் தோல்வியில் முடிவடைகின்றன. ஜெபிக்கும்போது நாம் தேவ பிரசன்னத்திலிருக்கிறோம் என்ற உணர்வு வேண்டும். அவரைத் துதித்துப்பாடி அவரது முகத்தை நோக்க வேண்டும். அவரிடம் ஒரு நண்பனைப் போல உறவு கொள்வது மேலானது. அது தான் ஜெபம்.

தேவனை மட்டுமே நாம் வாஞ்சிப்பதற்கு அடையாளம் ஜெபம், மேலானவைகளையே நாம் நோக்குகிறோம் என்பதற்காக வெளிப்படுத்தும் அன்பின் வார்த்தைகள் ஜெபம். ஸின் ஸென்டார் என்ற பக்தன் கொடைகளை விட அதனைக் கொடுப்பவரையே நாடுபவர். அவர், "எனக்கு ஒரே வாஞ்சை அவரே, அவர் மட்டுமே" என்று கூறினார்.

நமது தேவைகளை தேவனிடம் கேட்கும்படி அவர் கூறியிருப்பது உண்மை தான். நாம் கேட்க வேண்டியதும் அவசியம். ஜெபத்தின் மூலம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்பவரும் அவரே, ஆனாலும் நமது ஜெபங்கள் அவரைப் பிரியப்படுத்துகிறவைகளாயிருக்க வேண்டும். விண்ணப்பங்களை ஏறெடுப்பதை விட அவரது பிரசன்னத்தை நாடுவது மேலானது.

இதற்காக முதலாவது தேவனுடைய மகிமையை உணர வேண்டும். இரண்டாவதாக அவரது கிருபையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேவ மகிமையை உணருதல்:- நாம் யாரேனும் தேவனுடைய மகா விஸ்தாரமான மகிமையை சிந்தித்து ஆச்சரியப்பட சமயம் செலவு செய்கிறோமா? 'கிருபை' என்ற பதத்தின் முழுமையான பொருளை அறிந்திருக்கிறோமா? அடிக்கடி நமது ஜெபங்கள் பயனற்றவைகளாக வல்லமையற்றவைகளாகவும் மட்டுமல்ல, ஜெபம் என்று சொல்லக் கூடாதவைகளாக இருக்கவில்லையா? காரணம் நாம் சிந்தனையற்றவர்களாகவும், ஆயத்த மற்றவர்களாகவும், ஆத்திரமாகவும் தேவ சன்னிதியில் செல்லுகிறோம். அவரது மகத்துவம், மகிமை ஆகியவற்றையும் அவரது ஐசுவரியத்தையும் பெற்றுக் கொள்ள வருகிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் ஜெபிக்கிறோம். தேவனைப் பற்றிய மேன்மையான எண்ணம் வேண்டும்.

எனவே நமது விண்ணப்பங்களை அவருக்கு முன்பாக வைக்குமுன் அவரது மகிமை, கிருபை ஆகியவற்றை சிந்திக்க வேண்டும். எதைப் பெற்றுக் கொள்ளவும் நமது ஆத்துமாவை அவருக்கு நேராக உயர்த்த வேண்டும். நம்மை தேவ சமூகத்தில் அர்ப்பணித்து, நமது ஜெபங்களை ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய அவருக்கு நேராக ஏறெடுக்க வேண்டும். அவர் முடிவில்லாதவர். ஒளியில் வாசம் பண்ணுகிறவர். அவருக்கே கனமும், நித்திய வல்லமையும் உரியவைகள் *1 தீமோ.6:16*. மகா மகிமை நிறைந்தவராகிய அவருக்கு வணக்கத்தையும், துதியையும் செலுத்துவோம். அர்ப்பணம் மட்டும் போதாது, அவரை வணங்க வேண்டும்.

'சேனைகளின் தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்பது சேராபீன்களின் சத்தம். 'பூமியெல்லாம் அவரது மகிமையால் நிறைந்திருக்கிறது' ஏசா.*6:3*. 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை' லூக்.*2:13* என்பது பரமசேனைத் திரளின் பாடல். **ஆனால் நீங்களோ தேவனோடு உறவு கொள்ள வரும்போது கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக்கூட அகற்றுவதில்லை** யாத்.*3:5*.

நாமும் அவரது மகிமையை தரிசிக்க அவரை நெருங்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு தமது சீஷர்களோடு ஜெபித்தபோது தமது மகிமையை அவர்கள் காணவேண்டுமென்று ஜெபித்தார் யோவா.*17:24*.

தம்மைக் காண்பிக்கும் விருப்பத்தில் அவர் நம்மிடம் ஜெபம் பண்ணக் கூறவில்லை. 'பிதாவே ..... உமது குமாரனை மகிமைப்படுத்தும்' 'பிதாவே என்னை மகிமைப்படுத்தும்' யோ.*17:1-5* என்று அவர் பிதாவிடம் ஜெபித்தார். நமது அன்பின் ஆண்டவர் நம்பிக்கைக்கு உரியவர், அளவற்ற வல்லமை அவரிடமுண்டு. எனவே நமது தேவைகளுக்காக

(4-ம் பக்கம் பார்க்க)

தபால் வழி ஊழியம்

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
மொபைல் : 95432 21008
94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

ஒருவன் கவலைப்பட்டு ஒரு முழத்தைக்கூட கூட்டமுடியாதென்று தான் ஆண்டவர் இயேசு கூறினார் மத்தேயு 6:27. பாடுகளும், துன்பங்களும் விசுவாசியின் பாதையில் அவனுடைய ஆசீர்வாதத்திற்காக தேவனால் வைக்கப்பட்ட தேவ தூதர்களேயாகும். அவைகளுக்காக கவலைப்படுகிறதை விட்டுவிட்டு அவைகளுக்காக கர்த்தரைத் துதிக்க கற்றுக்கொள்வோமாக.

வாக்குத்தத்தம்

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் யாத்.15:26.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 ஆகஸ்ட் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். அப்பொழுது சாமுவேல் ஒரு கல்லை எடுத்து, மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, **இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவிச் செய்தார்** என்று சொல்லி, அதற்கு எபனேசர் என்று பேரிட்டான் *1 சாமுவேல் 7:12.*

தினசரி பத்திரிகை செய்தி ஒன்றை கீழே அச்சிடுகிறேன்:

நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் மூடப்பட்டது

நாகர்கோவில், ஜூன் 25 - நாகர்கோவிலில் உள்ள குமரி மண்டல தபால்துறை முதுநிலை மண்டல மேலாளராக பணியாற்றி வந்தவர் சந்திரசேகரன். இவர் கடந்த சில நாட்களுக்கு முன் சென்னைக்கு மாற்றப்பட்டார். சென்னையில் கொரோனா பரவலை தடுக்க முழு ஊரடங்கு அமலில் இருந்து வருவதால், அதிகாரி தபால்துறை ஜீப்பிலேயே சென்னை புறப்பட்டுச் சென்றார். வழக்கமான டிரைவர் விடுப்பில் இருந்ததால் தக்கலையில் உள்ள தலைமை தபால் நிலையத்தில் ஊழியராக பணியாற்றும் ஒருவர் அந்த ஜீப்பை ஓட்டிச் சென்றுள்ளார். அதிகாரியை சென்னையில் விட்டுவிட்டு மீண்டும் அவர் அதே ஜீப்பில் நாகர்கோவிலுக்கு கடந்த சில நாட்களுக்கு முன் வந்தார். அவருக்கு ஆர்ல்வாய்மொழி சோதனை சாவடியில் சளி மாதிரி சேகரிக்கப்பட்டு ஆசாரிபள்ளம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பின்னர் அவர் ஜீப்பை நாகர்கோவில் தலைமை தபால்நிலையத்தில் நிறுத்திவிட்டு, நாகர்கோவில் தேவசகாயம் தெருவில் உள்ள தபால் துறை ஊழியர்கள் குடியிருப்பில் உள்ள வீட்டுக்குச் சென்றுவிட்டார். நேற்று முன்தினம் அவரது பரிசோதனை முடிவு வந்தது. இதில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அவரையும், அவருடன் வீட்டில் இருந்த மனைவியையும் ஆசாரிபள்ளம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் கொரோனா சிகிட்சை வார்டிலும், மனைவி தனிமைப்படுத்தும் வார்டிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தபால்துறை ஊழியரின் மனைவியும் தபால்துறை ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து நேற்று பிற்பகலில் நாகர்கோவிலில் உள்ள தலைமை தபால் நிலையத்திலும், அங்கு நிறுத்தப்பட்டு இருந்த ஜீப்பிலும் மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் பகவதி பெருமாள் தலைமையிலான ஊழியர்கள் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டது. தலைமை தபால் நிலையம் நேற்று பிற்பகலுக்குப் பிறகு மூடப்பட்டது. மேலும் தேவசகாயம் தெருவில் உள்ள தபால்துறை ஊழியர்கள் குடியிருப்பில் உள்ள அவருடைய வீட்டுக்கும் கிருமிநாசினி மருந்து தெளிக்கப்பட்டு, நோட்டீஸ் ஒட்டப்பட்டது. அந்த வீடும் பூட்டப்பட்டு தடை செய்யப் பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- தினத்தந்தி 25.06.2020

அநேக ஆண்டுகளுக்கு முன் I.P.C. சபையை சார்ந்த ஒரு வயதான போதகரும், அவருடைய மகனும் சாலை விபத்தில் இறந்து போனார்கள். அடக்க ஆராதனைக்கு சபை விசுவாசிகளும், அநேக ஊழியர்களும் வந்திருந்தார்கள். A.G. சபையின் தலைமை போதகர் அடக்க ஆராதனையை நடத்தினார். மரித்த போதகர் தன்னுடைய பத்திரிகையை நம்முடைய அச்சகத்தில் அச்சிட்டுக் கொண்டிருந்தபடியால் நானும் அடக்க ஆராதனையில் கலந்துகொண்டேன்.

புருஷனையும் ஒரே ஆண் மகனையும் ஒரே சமயத்தில் விபத்தில் இழந்த போதகரின் மனைவி, ஏங்கிக் கொண்டிருந்தார்கள். மருமகள் கைக்குழந்தையுடன் அழுது கொண்டிருந்தாள். அடக்க ஆராதனையை நடத்தின அனுபவமிக்க போதகர் இவ்வாறு பிரசங்கித்தார் :

யோபுவின் காலத்தில் அடக்கத்திற்காக பெட்டி செய்கிற பழக்கம் இருந்திருக்குமானால் யோபுவின் வீட்டிற்கு முன்பாக **10 பெட்டிகள்** வைக்கப்பட்டிருக்கும் யோபு.*1:2, 18, 19.*

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, கீழே இன்னமும் ஒரே ஒரு சிறிய பத்திரிகை செய்தியை மாத்திரம் அச்சிடுகிறேன் :

செயற்பொறியாளர் கணவர் மரணம்

சென்னை, ஜூன் 27 - பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் தேர்வாய் கண்டிகை புதிய நீர்தேக்க திட்ட கோட்ட செயற்பொறியாளர் தில்லைக்கரசியின் கணவர் வெங்கடேசன் கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இறந்தார்.

தில்லைக்கரசியின் மாமியார் கடந்த சில நாட்களுக்கு முன்பு இறந்தார். இவருடைய மாமனார், மகள், நாத்தனார், சகோதரர் ஆகியோர் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் தீவிர சிகிட்சை பிரிவில் உள்ளனர். குடும்பமே கொரோனா தொற்றுக்கு ஆளாகி மருத்துவமனையில் உள்ளனர்.

❄ ❄ ❄

யாருக்காக யார் அழுவது? யார் யாரை அடக்கம் பண்ணுவது? சில இடங்களில் பிரேதங்களை தூய்மைப் பணியாளர்களே தூக்கி குழிக்குள் வீசுவதை பார்க்கிறோமல்லவா!

இம்மாத விசேஷ செய்தி : A special message for you

"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" எபேசியர் 5:16

*இந்த தேவ ஆலோசனை, மேடையிலிருந்து பிரசங்கியார் (Preacher) பிரசங்கிக்கவோ, சபைப்போதகர் சபை மக்களைப் பார்த்து எச்சரிக்கவோ எழுதப் படாமல், **அனைத்து தேவ பிள்ளைகளையும்** எச்சரிக்கவே எழுதப்பட்டுள்ளது.*

*2016-ம் ஆண்டு சிவகாசி ஷெக்கைனா A.G. சபையில் உபவாச ஜெபம் நடத்தி முடித்திருந்தோம். அப்பொழுது ஜெபித்துக் கொண்டிருந்த போது **ஆண்டவர், மாதந்தோறும் உபவாச ஜெபத்தை நடத்தச் சொன்னார்.** அதன்படி மாதந்தோறும்*

(3-ம் பக்கம் பார்க்க)

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி
வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile : 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com
- **காசோலை** வழியாக காணக்கை அனுப்புவோர் (Cheque & Draft) **வெஸ்லி தேவதாசன்** என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுகு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக போன் நம்பர் 95432 21008 வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

(2-ம் பக்க தொடர்ச்சி)

நடைபெற்ற உபவாச ஜெபங்களில் சில முக்கியமான இடங்களை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன்:

பெப்.2016	ஸ்பிக் நகர் A.G. சபை தூத்துக்குடி
மேய் 2016	சிமிர்னா A.G. சபை, வண்ணார்பேட்டை, நெல்லை
ஜூலை 2016	அழைப்பின் எதிரொலி சபை சேப்பாக்கம், சென்னை
அக்.2016	ஒரேப் ஊழியங்கள் விருகம்பாக்கம், சென்னை
நவ.2016	1st அசெம்பிளி ஆப் காட் சபை, மதுரை
பெப்.2018	சிற்றி A.G. சபை கோயம்பத்தூர்
ஏப்.2018	Epworth Methodist Tamil Church, Mumbai
மேய் 2018	கிரேஸ் A.G. சபை தஞ்சாவூர்
ஜூன் 2018	I.C.R.M. Church, Mysore
செப்.2018	A.G. சபை, தேனி
அக்.2018	Jubilee Hall, Andaman
பெப்.2019	El-Shaddai Church New Delhi
ஏப்.2019	Methodist Tamil Church Navi, Mumbai
மேய் 2019	திருப்பூர் A.G. திருச்சபை திருப்பூர்
நவம்.2019	நித்திய வாழ்வு A.G. சபை சேலம்

இந்த ஆண்டு மும்பை பட்டணத்திற்கு டிக்கெட் முன்பதிவு செய்திருந்தோம். தர்மபுரி, பெங்களூர் உபவாச ஜெபங்களுக்கு ஜெப அட்டைகள் அச்சிட்டு அனுப்பியிருந்தோம். ஆயினும் கொரோனா19 வைரஸ் தொற்று வியாதியின் காரணமாக உபவாச ஜெபங்களை நடத்த இயலாமல் போயிற்று. தேவனுடைய வசனம் நம்மை எச்சரிக்கிறது, **"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்"**

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தேவ சபை ஊழியரே, கொரோனா ஒழிந்தபிற்பாடு ஒரே ஒரு விசை உங்கள் சபை கட்டடத்தை **"எழுப்புதலுக்காக இதய கதறல்"** 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தருவீர்களா?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

உதவி : 9489740295 **வெஸ்லி தேவதாசன்**
அலுவலகம் : 9543221008 (WESLEY DEVADASON)

தரைமட்டும் உன்னை தாழ்த்திக் கொள்ள முடிந்தால் வானளவு உன்னை உயர்த்த தேவனால் முடியும்

ஆண்டவராகிய இயேசு நம்மை முழங்கால்களில் நிற்கும்படி பயில்காட்டி அழைக்கிறார்

The Lord Jesus backons us to our knees

"நாம் தேவனுக்காக அதிகமாகச் செய்ய வேண்டுமானால் அவரிடம் அதிகமாகக் கேட்க வேண்டும், அதாவது ஜெபவீரராயிருக்க வேண்டும்" என்று எட்வர்டு பேய்சன் என்ற பரிசுத்தவான் கூறியிருக்கிறார். அது சரியானதும் வேத அடிப்படை கொண்டதுமாகும். நமது ஜெபங்களுக்கு பதில் தரப்படாமலோ அல்லது கேட்கப்பட்டும் கிடைக்காமலிருந்தாலோ தவறு தேவனிடமில்லை, நம்மிடமே. நமது ஜெபங்களுக்குப் பதில் தர தேவன் ஆவலுடையவர். ஏனெனில் நாம் கேட்டால் தருவதாக அவர் வாக்களித்துள்ளார்.

அன்பானவர்களே, நமது ஆண்டவர் நாம் அவரிடம் கேட்க மட்டுமல்ல அதிகமாய்க் கேட்க எதிர்பார்க்கிறார். அப்படி அதிகமாகக் கேட்கும்போது நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். எதுவுமே ஜெபத்திற்கோ, தேவ சித்தத்திற்கோ மேலாகச் செல்லுவதை அவர் விரும்புவதில்லை.

ஆண்டவரின் வார்த்தைகள் உண்மையல்லவென்று நாம் சொல்ல மாட்டோம். ஆனால் கிறிஸ்தவர்கள் அப்படி விசுவாசிப்பதாகத் தெரியவில்லை. ஏன் அவர்கள் விசுவாசிக்கவில்லை? அவர்கள் உதடுகளை மூடுவது எது? அதிகமாக ஜெபிப்பதற்குத் தடை என்ன? அவருடைய அன்பிலே சந்தேகமா? இல்லையே! அவர் தமது ஜீவனை நமக்காகத் தந்துவிட்டார். பிதாவும் நம்மை நேசிக்கிறார் என்று கிறிஸ்து தமது சீஷர்கள் ஜெபிக்க வேண்டுமென போதித்தபோது கூறினார் யோவா.16:27.

அவரது வல்லமையை சந்தேகிக்கிறோமா? "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது..... உங்களுடனே இருக்கிறேன்" மத்.28:18-20 என்று கூறியிருக்கிறாரே. அவர் நமக்காகத் தெரிந்து கொண்டவர்களில் சந்தேகமா? இல்லையே. ஆயினும் ஒரு சில தேவ பிள்ளைகள் மட்டுமே ஜெபம் இன்றியமையாதது என்று எண்ணுகின்றனர்.

தேவனை சோதித்துப் பார்க்க பயப்படுகிறோமா? என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர் வாதத்தை வருஷிக்க மாட்டேனோ வென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் மல்கி.3:10. தேவன் ஒரு வாக்கை அளிக்கும்போது நாம் தைரியமாக "தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" அப்.27:25 என்று பவுலைப்போல சொல்ல முடியுமா? அவரது வசனத்தில் விசுவாசம் வைப்போம்.

நாம் இன்றே ஜெபிக்க ஆரம்பிப்போமா? இன்னொரு வசதியான காலம் வரட்டும் என்று தள்ளிப்போட வேண்டாம். தேவன் நாம் ஜெபிப்பதை விரும்புகிறார். நம் அன்பு இரட்சகர் நாம் ஜெபிப்பதை விரும்புகிறார். எனது ஜெபம் அவருக்குத் தேவை. எல்லாவற்றிற்கும் ஜெபம் தேவை. இதில் தயக்கம் வேண்டாம்.

நாம் முழங்காலில் நின்று கொண்டே ஒரு கேள்வியினைக் கேட்போம். "பாவிகளின் இரட்சிப்புக்காக அதிக ஊக்கமாகவும், அடிக்கடியாகவும் அதிகமாக ஜெபிக்காவிட்டால் எத்தனை பேர் ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் வரக்கூடும்?"

கிறிஸ்துவின் சர்வ மகிமையின் ஒரு காட்சி மற்றும் ஒரு தரிசனத்தின் மூலம் அவரது மகிமையின் ஐசுவரியத்தை நாம் பெறவேண்டும். அவர் இலவசமாக அருளும் பெலத்த வல்லமையையும் பெறவேண்டும். அப்போதுதான் தேவை மிகுந்த உலகத்தின் தேவைகளைக் கண்டுகொள்ள முடியும்.

நாம் குறைவாக ஜெபிப்பது ஆச்சரியமல்ல. ஆனால் **நமது தேவை, இடும்பம், நண்பர்கள், பேராசை, பட்டணம், தேசம், உலகம் ஆகியவற்றின் தேவையை அறிந்தும் முழங்காலிலிருந்து எழும்புவது தான் ஆச்சரியம்.** இத்தேவைகளெல்லாம் கிறிஸ்து இயேசுவில் தேவனுடைய ஐசுவரியத்தின் மூலம் சந்திக்கப்படும். இதில் சந்தேகமில்லை. ஆனால் ஜெபிக்க வேண்டும். "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவுகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில் நிறைவாக்குவார்" பிலி.4:19. அவரது ஐசுவரியத்தைப் பகிர்ந்தளிக்க நாம் ஜெபிக்க வேண்டும். அவரை நோக்கிக் கூப்பிடுகிற அனைவருக்கும் அவர் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் ரோமர் 10:12.

எழுப்புதல் ஏன் தாமதிக்கிறது என மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஜெபக் குறைவைத் தவிர வேறு காரணமே இல்லை. கிறிஸ்துவின் குரல் நம்மை ஜெபிக்கும்படி எழும்பச் செய்யாவிட்டால் வேறு எந்தக் குரலும் நம்மை எழுப்பமுடியாது.

தூய ஆவியானவர் மட்டுமே கிறிஸ்தவர்களைக் கண்டித்து உணர்த்தி ஜெபக்குறைவை அகற்றி அவர்களை முழங்காற்படியிடச் செய்யக்கூடும். அப்போது அவர்கள் இரவும் பகலும் விசுவாசத்தோடு ஜெபிப்பார்கள். தேவன் பரத்திலிருந்து நம்மை இப்போதே முழங்காற்படியிட அழைக்கிறார். ஜெபத்தின் மூலம் அவரது கிருபையின் ஐசுவரியத்தைப் பெறுவோமாக.

✦ தேவ கிருபையால் இந்த செய்திகள் ஜூன் மாத இறுதியில் தயாரிக்கப்பட்டு, ஜூலை மாத ஆரம்பத்தில் அச்சிட அளிக்கப்படுகிறது. ஜூலை 27 அல்லது 28 தியதிகளில் தபால் அலுவலகத்திற்கு அனுப்பப் படும்.

✦ ஒவ்வொரு மாத தூதனின் செய்திகளும் ஒரு தலைப்பின் கீழ் தயாரிக்கப்படுகிறது. ஜூன் மாத பத்திரிகை தேவனுடைய வார்த்தை என்ற தலைப்பிலும், ஜூலை பாவங்களை அறிக்கையிடுவது, ஆகஸ்ட் மாதம் ஜெபம் பற்றியும் எழுதப்பட்டிருப்பதை வாசகர் கவனிக்கும்படி பட்சமாய் கேட்கிறேன்.

(1-ம் பக்க தொடர்ச்சி)

அவரிடம் எளிய விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் செல்லலாம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள விரும்புகிறார்.

கர்த்தரின் மகிமையைக் குறித்து ஏசாயா, "கர்த்தரின் மகிமை வெளியரங்க மாகும், மாம்சமான யாவும் அதை காணும்" ஏசா.40:5 என்கிறார். நாம் ஜெபிக்கும் முன்பாகக் கூட அந்த மகிமை யின் ஒரு பகுதியைக் காண்கிறோம். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்பது மகிமையின் பிரதேசத் தில் வாழுகிறவரே என பொருள்படும். 'உமது நாமம் மகிமைப்படுவதாக' லூக்.11:2. இந்த மகிமையின் காட்சி அனைத்து பயத்தையும்சந்தேகத்தையும் நீக்கக் கூடியது.

தேவ மகிமையை வெளிப்படுத்துவது

சரியான அளவில் தேவனை வணங்கித் துதிக்க, நம்மில் அனேகர் அவரது மகிமையை உணர்ந்துகொள்ள நமக்கு உதவி தேவைப்படுகிறது. வில்லியம் லா என்பவர் "நீங்கள் ஞானமுள்ளவர் களாய் தேவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துபடி ஜெபிக்க ஆரம்பிக்கும்போது அவரது நற்பண்புகளைக் காண்பியுங்கள்" என்கிறார்.

நம்மில் சிலர் காலையில் எழுந்த வுடன் வானத்தை நோக்கி, 'பிதாவாகிய தேவனுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக' என்று சொல்லிவிட்டால் போதும் என்று எண்ணு கிறோம். ஆனால் அவர் பரிசுத்தமானவர், வல்லமை நிறைந்தவர், கிருபையுள்ள இரட்சகர் என்பதை மறந்து விடுகிறோம். ஆனால் அப்படி வெளிப்படுத்துவது ஆத்துமாவில் அமரிக்கையையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும்.

"என் தேவனே நீர் எவ்வளவு அதிசயமானவர்!
எமது மகத்துவம் பிரகாசமானது
உமது இரக்க ஆசனம் மிக அழகியது.
அது எங்கள் அந்தகாரத்தில் எரியும் விளக்கு
உமது ப்ரவை என்ன ஆச்சரியம்! என்ன அழகு!
உமது முடிவற்ற ஞானமும் எல்லையற்ற வலிமையும்
ஆச்சரியமும் பரிசுத்தமுமானவை"

எனவே

"தூய தூய தூயரே சர்வ வல்ல நாதா
வானம் பூமி ஆழி உம்மைத் துதி செய்யுமே"

என்று பாடி அவரைத் துதிப்போம்.

"என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் தேவனில் களிகூருகிறது" லூக்.1:46-47 எனப் பாடுவோம். "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத் தை ஸ்தோத்தரி" சங்.103:1 என அவரைத் துதிப்போம். "..... என் தேவனாகிய கர்த்தாவே நீர் மிகவும் பெரியவராயிருக் கிறீர். மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்" சங்.104:1 என்று பாடுவோமாக. "அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்" சங்.29:9. நாமும் அவருடைய மகிமையை பிரஸ்தாபப்படுத்துவோம்.

அவருடைய மகிமையை பிரதிபலித்தல்

"சகலமும் அவராலும், அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை யுண்டாவதாக ஆமென்" ரோமர் 11:36. இப்படிப்பட்ட தேவனிடம் ஜெபத்தின் மூலம் அவரிடம் வரும்படி அழைக்கிறார். இந்த தேவன் நமது தேவன், மனுஷர் களுக்காக வரங்களைப் பெற்றுக் கொண் டிருக்கிறார் சங்.68:18. அவருடைய நாமத்தினால் அழைக்கப்பட்ட அனை வரும் அவருடைய மகிமைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டவர்கள் ஏசா.43:7. அவருடைய சபை மகிமை, தூய்மை யுடன் குற்றமற்றதாகவுமிருக்க அவர் விரும்புகிறார் எபேசி.5:27.

தேவனில் காணப்படும் மகிமை யை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும். மீட்கப்பட்ட நமக்கு அவர் வைத்திருக் கும் மிகப்பெரிய ஈவு இது. அவர் வரும் நாளிலல்ல, அந்த மகிமை இப்போதே பரிசுத்தவான்களுக்கு வைக்கப்பட்டிருக் கிறது 2 தெச.1:10. "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்கு கொடுத் தேன்" யோவா.17:22. அவர் கட்டளைப் படி, "எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது ..... அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்" ஏசா.60:1-2 என்று ஏசாயா மூலம் கூறப்படுகிறது.

பேதுரு சீஷர்களைக் குறித்து, 'தேவனுடைய ஆவியானவர் உங்களில் தங்கியிருக்கிறார்' என்று கூறிய மேலான அனுபவம் நமக்கு உண்டா? ஜெபத்தின் மூலமாகவே இந்த மகிமையைப் பெற்றுக் கொள்ளவும் அதைப் பிரதிபலிக் கவும் கூடும். ஜெபிக்கும் போது தூய ஆவியானவர் கிரியை செய்து கிறிஸ்து வினுடையவைகளை நமக்கு வெளிப் படுத்துவார் யோவா.16:15.

'உமது மகிமையை எனக்குக் காண்பியும்' என்று மோசே ஜெபித்த போது, அவன் அந்த மகிமையைப் பார்த்ததோடு அவனுடைய முகமும் பிரகாசித்தது யாத்.33:18, 34:29. நாமும் கிறிஸ்துவின் முகத்தின் மகிமையைப் பார்ப்போமானால் அந்த மகிமையின் ஒரு ஷண காட்சியை காண்பது மட்டு மல்ல அதின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளவும் கூடும்.

அதுவே ஜெபத்தின் உயரிய விளைவுமாகும். தேவன் நம்மில் மகிமைப் படும்படியாக, அவருடைய மகிமையை நாம் பெற்றுக்கொள்ள ஒரே வழி ஜெபம் ஏசா.60:21. "..... எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவோடும் இருக்கிறது" 1 யோ.1:3 என்று யோவானோடு சொல்லு வோம். மக்கள் நம்மைப் பார்த்து இவர்கள் இயேசுவோடிருந்தவர்கள் என்று சொல்லட்டும்.

சூரிய ஒளியில் ஒரு மலர் அழகு பெறுவது போல, நமது ஆத்துமா ஜெபத்தின் மூலம் தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்பட்டு அவரது தூய்மையின் அழகைப் பெறட்டும். நமது ஆண்டவர் ஜெபித்தபோது அவரது முகம் மறுரூப மடைந்தது போல நமது முகரூபமும் மாறட்டும். ஜெபத்திற்கு நாம் உரிய இடம் கொடுக்கும்போது நாமும் மறுரூப மலையின் அனுபவத்தைப் பெறுவோம். மக்கள் நமது முகத்தில் நமது உள்ளான ஆவிக்குரிய அழகைக் காண்பார்கள். பிறர் தேவமகிமையை நம்மில் காண நாம் காரணமாயிருப்போமாக.

தேவ மகிமையின் ஒரு புதிய காட்சி

ஜெபம் ஆவிக்குரிய ஜீவன் நம்மில் இருப்பதற்கு அடையாளம். நமது உத்தம ஜெபத்தைச் சார்ந்துதான் நமது ஆவிக்குரிய தன்மையும் கனி கொடுத்தலும் இருக்கின்றன. வீட்டை விட்டு வெளியே சென்ற இளையகுமாரன் **"நான் எழுந்து என் தகப்பனிடம் போய், தகப்பனே...."** என்றது போல ஆரம்பிப்போம்.

நமது தோல்வியின் இரகசியம் நாம் தேவனைப் பார்ப்பதற்குப் பதிலாக மனிதரைப் பார்க்கிறோம். மார்ட்டின் லூதர் தேவனை சந்தித்தபோது ரோம மார்க்கம் நடுங்கியது. ஜோனதான் எட்வர்ட்ஸ் தேவனை தரிசித்தபோது மிகப்பெரிய உயிர்மீட்சி ஏற்பட்டது. ஜான்நாக்ஸ் தேவனைக் கண்டபோது ஸ்காட்லாந்து முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்தது. ஜாண்வெஸ்லி தேவனை நோக்கிப் பார்த்தபோது உலகம் முழுவதும் ஆராதனைக் கூடமா யிற்று. ஜார்ஜ் முல்லர் தேவனை தரிசித்த போது ஆயிரக்கணக்கான அனாதைகள் போஷிக்கப்பட்டனர். அதே மாறாத தேவன் இன்றும் ஜீவிக்கிறார்.

அவரது முழுமையான மகிமை யில் அவரை தரிசிக்கும் காலம் நெருங்கி விட்டது. அவர் பூரண மகிமையின் தேவன். அவரை நாம் தரிசிப்பதால் என்னென்ன நடக்கும் என்று நாம் அறியோம். நாம் பிறருக்காகக் காத்திருக்க வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் திறந்த முகத்தோடும் தெளிவான இருதயத் தோடும், கர்த்தரின் மகிமையின் காட்சி யைப் பெற்று சாட்சியாக வாழுவோம்.

தேவனுடைய வார்த்தை மேலானது

Gods Superior Word by N. A. Woychul

தேவனுடைய வார்த்தை தோற்றத்திலும், சிந்தனையிலும், வாக்குத்தத்தத் திலும், அழகிலும், நோக்கத்திலும், வல்லமையிலும், விளைவுகளிலும் மேலானது. அதன் எளிமை, சுருக்கம், தெளிவு ஆகியவை நமக்கு தாக்கத்தை அளிக்கின்றன. வேதபுத்தகம் குழந்தைகளையும், பரிசுத்தவான்களையும் ஒன்றுபோல வசீகரிக்கக் கூடியது.

அதின் மேன்மைக்கு முக்கிய காரணம் அதில் காணப்படும் சத்தியம் ஒன்றே. அதின் வார்த்தை கள் உண்மையும் அவை தொடும் பகுதிகள் சத்தியமுமானவைகள். இதிலடங்கும் வாக்குத்தத்தங்களெல்லாம் தேவனுடைய முடிவில்லாத பொக்கிஷங் களையும் அளவில்லாத வல்லமையையும் அடிப்படையாக கொண்டவை.

ஒரு அமைதலான இடம், ஒரு அமைதலான நேரம் ஒரு அமைதலான இருதயம்

A quiet place, a quiet hour, a quiet heart

David MacInlyre (1859-1938)

"நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு" மத்.6:6.

அமைதியான இடம்

அமைதியான இடம் நமக்கருகிலேயே இருக்கிறது. ஆனால் நமது சக விசுவாசிகளில் அனேகர் இந்த தனியான இரகசிய இடத்திற்குள் செல்ல இயலவில்லை. கூட்டுக் குடும்பத்தில் வாழும் ஒரு தாயார், பட்டணத்திலுள்ள விடுதியில் தங்கும் ஒருவர், தன் சிறு குடிசையில் வாழும் விவசாயி, போர்முகத்திலிருக்கும் ஒரு படைவீரன், பள்ளி விடுதியில் தங்கியிருக்கும் ஒரு மாணவன் போன்றவர்கள் ஒரு தனியான இடத்தைக் கண்டு பிடிப்பது எப்படி? உங்கள் பரம தந்தை எல்லாவற்றையும் அறிவார் மத்.6:8. நமக்கு ஒரே முன்மாதிரியான ஆண்டவர் ஆறுதலான அனுபவங்களை நமக்கு முன் வைத்திருக்கிறார்.

ஆண்டவர் இவ்வுலகில் வெளிப்படையான ஊழியத்தை ஆரம்பித்த போது தனிமை அவருக்கு அரிதாகவே யிருந்தது. ஆனால் அவர் பிதாவிடம் உறவு கொள்ள வாஞ்சித்த போது அவர் தனியாக கரடுமுரடான மலைப்பிரதேசங்களுக்குச் சென்று ஜெபித்தார்.

குளிர்ந்த மலைகளும், நடுஇரவு ஆகாயமும் அவரது ஜெப வாஞ்சைக்கு சாட்சியாயிருந்தன.

எருசலேம் நகருக்குப் பண்டிகைக்காக வந்த அவர், தாம் வழக்கமாக ஜெபிக்கும் கெத்சமனேயிலுள்ள ஒலிவ மரத்தோட்டத்திற்குத் தனியாயிருக்கும் படி சென்றார். நெருங்கி அடர்ந்த மரங்களினடியில் நட்சத்திரங்களின் ஒளி ஊடுருவிய அமைதியான இடத்தில் ஜெபித்தார்.

எந்த இடமும் ஒரு சிற்றாலயமாக மாறலாம். நாம்தான் அந்த இடத்தை ஜெபிக்கும் இடமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ணச் சென்ற இடம் ஒரு வயல்வெளி. யாக்கோபு யாப்போக்கு நதிக்கரையில் தனித்திருந்து ஜெபித்த போது தேவதூதனோடு போராடி மேற்கொண்டான் என்பதை நாமறிவோம். மோசே தேவனுடைய மகிமை கடந்து சென்றதை கன்மலை வெடிப்பில் கண்டான். எலியா, ஆகாப் அரசனிடம் புசித்துக் குடிக்கும்படி சொல்லி அனுப்பியபின், தான் மட்டும் கர்மேல் பர்வதத்தின் சிகரத்தில் ஏறி ஜெபித்தான். தானியேல் பல வாரங்கள் இதெக்கேல் நதியோரமாக தேவனோடு தனித்து உறவாடி மகிழ்ந்திருந்தான்.

ஆத்துமா தன்னை அமைதியால் மூடிக்கொண்டு தேவனுக்கு நேராகத் திரும்பக் கூடுமானால், நெருக்கமான தெருவையும் அமைதியான இடமாக மாற்ற முடியும். நெருக்கமான ஓரிடத்தில் சிறுபிள்ளைகளுடன் வாழ்ந்த ஒரு பக்தியுள்ள பெண், பெரிய ஆடை ஒன்றை தலைமீது போட்டுக்கொண்டு 'இதுவே என் தனி ஜெப அறை' என்றாளாம்.

ஒரு அமைதியான நேரம்

நமது சமயத்தில் ஒரு பகுதி, நமது ஈடுபாடுகள், நெருக்கடியான வேலைகள், வியாபாரம், விளையாட்டுகள் போன்ற வற்றிலிருந்து விலக்கப்பட்டு ஜெபத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். இயந்திரமயமான இந்நாட்களில் பிரயாண நெருக்கடிகளில் நாம் சிக்கித் தவிக்கிறோம். காலங்கள் வேகமாகப் பறந்து செல்வதால் பரத்திற்கு நேராக ஏறெடுக்க வேண்டிய பயபக்தியான சமயத்தை வேறு காரியங்களுக்காகச் செலவிடும் சோதனை உண்டு. முன் யோசனையும், சுயஒறுப்பும் இருந்தால் மட்டுமே நமது நெருக்கடியான கடமைகள் மத்தியில் ஒரு அமைதியான நேரத்தைப் பரிசுத்தமாக பயன்படுத்த முடியும். நமக்கு இன்பமானவைகளையும், ஆதாயமான வைகளையும் நாம் தியாகம் செய்ய வேண்டும். நமது பொழுதுபோக்குகள், பணிகள், கல்வி போன்றவற்றில் இடைவெளி ஏற்படுத்தி காலத்தை ஆதாயம் பண்ண வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தை தேவனோடு உறவாடும்படி செலவு செய்ய வேண்டும்.

ஒருவர் "நான் தனி ஜெபத்தில் அதிக நேரம் செலவு பண்ணுவதில்லை என அறிக்கையிடுகிறேன். ஆனால் தொடர்ந்து ஜெபிக்கும் பழக்கத்தை உருவாக்க விரும்புகிறேன்" என்று கூறலாம். மேற்கூறிய தனி ஜெபமும், இடைவிடாத ஜெபமும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிக தேவையானவை. ஆண்டவராகிய இயேசு இரண்டையும் பின்பற்றினார். அவருக்கும் பிதாவுக்கு முள்ள தொடர்பு ஒருபோதும் முறிக்கப் படாததாயிருந்தது. அவர் தேவ குமாரன். மக்கள் கூட்டத்திலிருந்து வெளியேறி வனாந்தரத்திற்குச் சென்று ஜெபித்தார் என்று லூக்.5:16-ல் படிக்கிறோம். ஜனக் கூட்டம் அவரை நெருக்கியது. மக்கள் அவரது வார்த்தைகளைக் கேட்கவும், பலவீனங்களிலிருந்து விடுதலை பெறவும் அவரை நெருங்கி வந்தபடியால் அவருக்குச் சாப்பிடவும் சமயமில்லாதிருந்தது. ஆனாலும் நெருக்கடிகளுக்கிடையில் அவர் ஜெபிக்க நேரம் எடுத்துக் கொண்டார்.

இவ்வாறு தனிமையை நாடி ஜெபித்த அவர் தேவகுமாரன். அவரிடம் அறிக்கையிட பாவம் இருக்கவில்லை. சரிப்படுத்தப்பட வேண்டிய தவறுகளில்லை. மேற்கொள்ளப்பட வேண்டிய அவிசுவாசமில்லை. அன்புத்தாழ்ச்சி சற்றேனுமில்லை. எனவே அவரது ஜெபம் தேவனோடுள்ள சமாதானமான சம்பாஷணையாகவோ, இன்ப உறவாகவோ இருந்திருக்க வேண்டும். ஆனால் ஜெபம் தொடர் யுத்தம் போலிருந்தது. எனவே தூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர். அவரது வியாகுலத்தால் அவரது வியர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாகத் தரையில் விழுந்தன. அழுகையோடும் கண்ணீரோடும் ஜெபித்தார்.

தேவகுமாரன் இவ்வாறு சமயத்தை ஒதுக்கி ஜெபித்தாரானால் பல்வேறு பாவங்களால் உடைந்து அங்கவீனரைப் போலிருக்கும் நாம் ஜெபத்தில் எவ்வளவு சிரத்தை காட்ட வேண்டும்.

ஜெபத்திற்காக நாம் சமயம் ஒதுக்காமலிருப்பது ஜெபத்தினால் வரும் நன்மைகளை நாமே திருடுவதாகும். ஜெபத்திற்கான சமயத்தை அளந்து பிரிக்க முடியாது. ஆனால் ஜெபத்தால் நன்மைகளைப் பெற நாம் துணிந்து ஜெபிக்க வேண்டும். கதவைப் பூட்ட வேண்டும். விலக்க வேண்டியவைகளை விலக்கி சமயத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

காலையில் அந்த நாளின் கடமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். சோதனைகள் வருவதற்கான வாய்ப்புகளை முன்னெச்சரிக்கையோடு கவனிக்க வேண்டும். நன்மையான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். மாலையில்

(6-ம் பக்கம் பார்க்க)

பரிசுத்த வாழ்வுக்காக அவரைப் பின்பற்றுதல்

Following him unto Holiness

Gean Nicalas Grou

"கர்த்தாவே உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளியினிமித்தம், செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" சங்.27:11.

தேவன் ஒருவரே பரிசுத்தர். அவர் ஒருவரே தமது பிள்ளைகளை தூய்மையின் பாதைகளில் நடத்த அறிந்திருக்கிறார். உங்கள் ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியையும், இருதயத்தின் எண்ணங்களையும், உங்கள் இரகசியங்களையும், உங்கள் கடினங்கள், தடைகள் போன்ற யாவற்றையும் அவர் அறிவார். அவரது சித்தத்தின்படி உங்களை வனையவும் முழுமையான சுத்திகரிப்புக்கு வழிநடத்தவும் அவர் அறிவார்.

இந்த நம்பிக்கையின் விளைவுகள் முற்றிலும் உணர்ந்து கொள்ளப்பட்டால் உங்கள் வாழ்வு முழுவதிலும் மாற்றம் ஏற்படும். இன்னும் அதிகம் அதிகமாக உங்களை ஆண்டவருக்கு ஒப்புவிப்பீர்கள். எதையும் கேட்கவோ மறுக்கவோ மாட்டீர்கள். அவர் சித்தம் செய்வதைத் தவிர எதையும் விரும்பமாட்டீர்கள். உங்களுக்காக எதையும் தேடமாட்டீர்கள். அவர் அனுப்புவதை சந்தோஷமாகப் பெற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கு முன் வைக்கப்படும் 'ஒரு அடி' மட்டும் போதும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வீர்கள்.

எந்த இடமும் ஒரு சிற்றாலயமாக மாறலாம். நாம்தான் அந்த இடத்தை ஜெபிக்கும் இடமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(5-ம் பக்க தொடர்ச்சி)

நாம் சந்தித்த தேவசெயல்கள், நாம் பாது காக்கப்பட்ட விதம், தேவன் கற்றுத்தந்த பாடங்கள் ஆகியவற்றை சிந்திக்க வேண்டும். ஏதேனும் பாவங்களிருந்தால் அவற்றை விட்டு விலக வேண்டும்.

ஜெபித்து வெற்றி பெறுவதற் கான எத்தனையோ விஷயங்கள் இருக் கின்றன. சபைக்காக, நண்பர்களின் இரட்சிப்புக்காக, மிஷனெறி பணிகளுக் காக, கிறிஸ்துவின் ராஜ்ய பணிக்காக மற்றும் அவரது வருகைக்காக இன்னும் ஆண்டவர் எதிர்பார்க்கும் பல்வேறு காரியங்களுக்காக ஜெபிக்கலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் இவை அனைத்தையும் நெருக்கி ஜெபிப்பது கூடாது. தனி ஜெபத்திற்கு ஆயத்தப் படும்போது சுயாதீனம் வேண்டும். சீன உள்நாட்டு மிஷன் பணியைப் பொறுப் பேற்று நடத்திய ஹட்சன் டெய்லர் தனக்குத் தனி ஜெபத்திற்காக சுயாதீன மான நேரம் பகலில் கிடையாதபடியால் அவர் இரவு இரண்டு மணிக்கு எழுந்து நான்கு மணி வரை ஜெபித்துவிட்டுத் தூங்குவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

யூத சமயத்தில் ஜெப தியானத் திற்குக் காலை, நண்பகல், மாலை என மூன்று வேளைகளைத் தினமும் ஒதுக்கி வைத்திருந்தார்கள் (சங்.55:17, தானி.6:10) நாமே ஒரு குறிப்பிட்ட சமயத்தை அமைத்துக் கொள்வது நலம். எப்படியும் ஒரு நல்ல சமயத்தை ஆண்டவரோடு உறவாட பிரத்தியேகப்படுத்துவது நன்று.

அமைதியான இருதயம்

தனது ஜெபத்தின் பெரும்பகுதி யான சமயத்தையும் அதன் ஆயத்தத்திற் காகவே பயன்படுத்தியதாக பக்தன் ஒருவர் கூறியிருக்கிறார். "நான் ஜெப தியானத்திலிருக்கும்போது என் இருதயம் கடினமாகவும் (வேறு எதையும் ஏற்றுக் கொள்ளாத) தேவ பிரசன்னத்தில் நிற்கக் கூடாததாக, ஒரு மனிதனுக்கு முன்பாக இருக்கும் ஒரு பறவை போலவும் இருந்தது" என்று இன்னொரு பக்தன் கூறுகிறார். ஜாண் பனியன் தனது அனுபவத்திலிருந்து "ஜெபத்தை ஆரம் பிக்கும்போது எத்தனை பக்க வழிகள் இருதயத்திற்கு இருக்கின்றன, எத்தனை பின்வழிகள் இருக்கின்றன அவற்றின் மூலம் அது தேவ பிரசன்னத்தை விட்டு தூரமாக நழுவிவிடுமோ என்பதை எவரும் அறிய முடியாது" என்று குறிப் பிடுகிறார்.

மனதை ஒருநிலைப்படுத்துவதற் கான மூன்று எளிய விசுவாச செயல் களுண்டு.

1. **ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக ஏற் பினைப் பெற்றுள்ளோம் என்பதை உணர வேண்டும். ஜெபத்தில் நமது முதல் செயல் நமது ஆத்துமாக்களை இயேசு கிறிஸ்து வின் இரத்தத்தின் வல்லமைக்கு ஒப்புவிப்ப தாகும். தேவ ஆட்டுக் குட்டியின் பலியின் வல்லமையால் தேவனுடைய சன்னிதானத் தில் வரும் சிலாக்கியத்தை நாம் பெற்றுள் ளோம் (எபி.10:19-23 படிக்க).**

2. **தெய்வீக ஆவியானவரின் கிருபையைப் பெற்றுக்கொள்ள நமது பாவங்களை அறிக் கையிட வேண்டும். ஏனெனில் ஆவியான வரின்றி எதுவும் நன்மையாகவோ பரிசுத்த மாகவோ இருக்க முடியாது.**

அவரே 'அப்பா பிதாவே' என்று நாம் அழைக்க போதிக்கிறார். அவரே தேவனுடைய ஆழமான காரியங்களை நமக்காக ஆராய்ந்து கண்டுபிடிக்கிறார். கிறிஸ்துவின் சிந்தையையும் சித்தத்தை யும் நமக்குத் தெரிவிக்கிறார். நமது பெலவீனங்களில் நமக்கு உதவி செய்து நமக்குப் பதிலாக மன்றாடுகிறார். நாமெல்லாரும் திறந்த முகமாகக் கர்த்த ருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறதுபோல கண்டு ஆவியாயிருக் கிற கர்த்தரால் அந்த சாயலாகி மகிமை யின் மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம் 2 கொரி.3:18.

அந்தரங்க அறையில் நாம் பிர வேசிக்கும்போது தேவனுக்கு முன்பாகத் தாழ்மையுடனும் நம்பிக்கையுடனு மிருந்து, தூய ஆவியானவர் நம்மில் வந்து நமது இருதயங்களை நிரப்ப ஆயத்தமாக வேண்டும். அப்போது ஜெபிக்கும் ஆவி யானவரிடமிருந்து பெற்று, ஜெபிக்கும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தும் ஏறெடுக் கும் விண்ணப்பங்கள் தெய்வீக விண்ணப் பங்களாகும். பாவத்தால் கறைபட்ட உதடுகள் மூலம் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்வார் (ரோமர் 8:26). தூய ஆவியானவரின் ஒத்தாசை யின்றி ஜெபம் மிகவும் கடினம். "நான் ஜெபத்திற்குச் செல்லும்போது உற்சாக மின்றி இருக்கிறேன். ஜெபத்திற்காக என்னை நான் பலவந்தம் பண்ண வேண்டியதாயிருக்கிறது. தேவன் முதலாவது என் இருதயத்தை அவரில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். பின்பு அதே நிலையில் காத்துக்கொள்ள மன்றாட வேண்டும். பலவேளைகளில் என்ன ஜெபிக்க வேண்டும் என்பதை அறியாம லிருக்கிறேன். ஆனால் அவரது கிருபை யால் ஆசீர்வதிக்கப்படுகிறேன். ஆவியான வர்தான் பெலவீனங்களில் உதவி செய்கி றார்" என்று கூறுகிறார் ஜான் பனியன்.

3. **ஆவியானவரால் தெரிந்து கொள்ளப்பட ஏதுக்களாகிய பிரகாசிக்கப் படுதல், ஆறுதல், உயிர்ப்பித்தல் மற்றும் கண்டித்து உணர்த்து தல் ஆகியவை தேவனுடைய வார்த்தை யாயிருப்பதால் நாம் விண்ணப்பங்களை ஏறெடுக்கும் போது நமது இருதயங்கள் தூய வேதவாக்கியங்களோடு ஏறெடுக்க வேண்டும். அப்படிச் செய்வதால் நமது மனம் அமைதி பெறுகிறது. இப்போது வேதத்தைச் திறந்து பரிசுத்த எழுத்துக்களை வாசிக்கும் போது நித்திய தேவன் அதன் மூலம் நம்மோடு பேசுவார். "சில வேளைகளில் வேதத்தின் ஒரு பகுதியில் உள்ளத்தை நிலைநிறுத்தாமல் எனக்கு ஜெபிக்க முடிவதில்லை. இது ஜெபிப்பதற்கு ஆரம்பிக்கும் போது என்னை ஆயத்தப்படுத்த தேவன் காட்டிய வழி" என்று ஜார்ஜ் முல்லர் அறிக்கையிட்டிருக்கிறார். "என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று" சங்.27:8. அவரோடு ஜெபிப்பதற்கு அவருடைய சித்தத்தினை நாம் அறிய வேண்டும். அவருக்கு முன்பாக நாம் அமை தியாயிருந்து அவர் நம்மை நடத்த அவரது கரங்களில் நம்மை ஒப்படைப்போமாக.**

தானியேலின் எழுப்புதலுக்கான ஜெபம் ஒரு தேசத்தின் சரித்திரத்தை மாற்றியது

Daniel's prayer for revival changed the history of a nation

வேதபாடபகுதி : தானியேல் 9:3-19

நாம் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை உலகமெங்குமுள்ள சபையில் தேடும் போது தானியேலின் எழுப்புதலுக்கான ஜெபத்தைப் பின்பற்றுவது நன்று. அதில் 7 முக்கிய குறிப்புகளை சிந்திப்போம்.

1. தானியேல் எழுப்புதலுக்கான ஜெபத்தில் வேத வசனத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தான்

புத்தகங்கள் மூலமாக தேவனு டைய ஆதரவின் காலம் வந்துவிட்டதை அவன் அறிந்தான். நாமும் எழுப்புதலுக் காக ஜெபிக்கும்போது வேதவாக்கி யங்களை பயன்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் ஜெபங்கள் சபையின் ஆவிக்குரிய நன்மைக்காக ஜெபிக்க வழி நடத்துகின்றன. நிருபங்களில் சுவிசேஷத் திற்கேற்ற ஜெபங்களும், வெளிப்படுத்த லில் ஏழு சபைகளுக்குச் சொல்லப்பட்ட செய்திகளும் எழுதப்பட்டுள்ளன. இவற் றில் எழுப்புதலின் ஜெபங்களுக்காக '*என்று கர்த்தர் சொல்லுகிறார்*' என்ற பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே வேதவசனத்தின்படி ஜெபிப்பது பயன்தரும்.

> "ஜெபத்தை ஆரம்பிக்கும்போது எத்தனை பக்க வழிகள் இருதயத்திற்கு இருக்கின்றன, எத்தனை பின்வழிகள் இருக்கின்றன அவற்றின் மூலம் அது தேவ பிரசன்னத்தை விட்டு தூரமாக நழுவிவிடுமோ என்பதை எவரும் அறிய முடியாது"

2. தானியேலின் ஜெபம் முழுவதும் பாவ அறிக்கை நிறைந்திருந்தது

"நாங்கள் பாவஞ்செய்து அக்கி ரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம் பண்ணி, உம்முடைய கற்பனைகளையும், உம்முடைய நியா யங்களையும் விட்டு அகன்று போனோம்" என்று அவன் ஜெபித்தான். இருதயம் நொறுங்குண்டவர்களாக நாம் சபைக் காகவும் தேசத்திற்காகவும் ஜெபிப்போம்.

நொறுங்குண்ட இருதயம் எழுப் புதலுக்கு மூச்சாயிருக்கிறது. தாழ்மையும், நொறுங்கிய இருதயமும் நமது மீறுதல் களையும் பாவங்களையும் ஒத்துக் கொள்ள ஏதுவானவை.

3. தானியேல் தாழ்மையுடன் இரட்டை உடுத்திக் கொண்டு ஜெபித்தான்

தேவனுடைய இரக்கத்தைப் பெற பணிந்த ஆவி வேண்டும். சரீரமும்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

ஆத்துமாவும் இரட்டால் மூடப்பட வேண்டும். பாவம் அதிகரிக்க அதிகரிக்க அதிக தாழ்மை தேவையாகிறது. எனவே எழுப்புதலுக்கான ஜெபம் மிகுந்த தாழ்மை யுடன் ஏறெடுக்கப்படுவது அவசியம்.

4. தெய்வீக இரக்கத்திற்காகத் தானியேல் அவசர ஜெபம் செய்தான்

தேவனுடைய கிருபை இரக்கம் ஆகியவை மட்டுமே நமக்கு நம்பிக்கை அளிக்கும். தேவ ஜனமாகிய நமக்கு தேவனுடைய இரக்கம் தேவை. "அவரு டைய கிருபை என்றுமுள்ளது" என்று சங்.136-ல் பாடுகிறோம்.

5. தானியேலின் ஜெபம் தேவனுடைய நீதியின் மேல் அதிக அழுத்தம் கொடுக்கிறது

கிறிஸ்து நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினபடியால் அவரே நமது மீட்பும், நீதியும். ஆவிக்குரிய சுகத்திற்கு நம்பிக்கையுமானார். "..... தமது நாமத் திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத் தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே" எபி.6:10. தேவனு டைய நீதி நமது ஜெபத்தின் நங்கூரம். அவரது நீதியும் சத்தியமும் நாம் சரீர பிரகாரமாக இரக்க ஆசனத்தின் முன்பாக வந்து அவரது இரக்கத்தைப் பெற காரண மாயிருக்கிறது எபி.4:16.

6. தானியேலின் ஜெபம் எழுப்புதலின் அவசர தேவையை தேவனிடம் அழுத்திக் கூறுகிறது

இஸ்ரவேல் நிந்தைக்கு ஆளாகி தேவனுடைய வீடு கை விடப்பட்டி ருந்தது. இங்கு பொதுவான மன்னிப்பு தேவைப்படுகிறது. மக்களுக்காகவும், சபைக்காகவும், தேவபிள்ளைகளுக்காக வும் கிறிஸ்து தன்னை அர்ப்பணித்த உலகுக்காகவும் ஜெபிக்க வேண்டும். தேவனுடைய இருதயத்தைத் தொடக் கூடிய பலத்த விண்ணப்பத்தை ஏறெடுக்க வேண்டும்.

7. தானியேலின் எழுப்புதலுக்கான ஜெபம் பதில் பெற்றது

வேதவாக்கியங்களின் படியும், தேவநாம மகிமைக்காகவும் ஏறெடுக்கப் படும் நீதிமானின் ஜெபம் கேட்கப் படுவது உறுதி.

எனவே நாமும் தானியேலைப் போல தாழ்மையுடனும், தியாகத்துட னும், மனந்திரும்புதலுடனும், முழு ஆத்துமாவோடும் எழுப்புதலுக்காக ஜெபிப்போம். உபவாசத்தோடு ஜெபிப் போம். கிறிஸ்துவின் இரத்தமும், அவரது மன்றாட்டும் பதிலைத் தரும் (யாக்.5:16, எபி.7:25)

தானியேலைப் போல ஜெபிக்கி றீர்களா? நாம் வேண்டிக் கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் படியே நமக்குச் செய்ய வல்லவராகிய அவர் ..." எபேசி 3:20.

உங்கள் முகத்தைக் கர்த்த ருடைய முகத்துக்கு நேராகத் திருப்பி தேசத்தின் ஆவிக்குரிய உயிர்மீட்சிக் காகவும் சபையின் எழுப்புதலுக்காகவும் ஜெபிப்பீர்களா?

ஜார்ஜ் முல்லரின் விசுவாச வாழ்வு - பகுதி 5

George Muller's Life of Trust - Part 5

ஏற்கெனவே முல்லர் 300 குழந்தை களுக்கான விடுதியினை நடத்தி வந்தார். அந்த விடுதியை ஆரம்பித்த குறுகிய காலத்திற்குள் இன்னும் அதிக பிள்ளைகளைத் தங்க வைப்பதற் கான பாரம் அவருக்குண்டாயிற்று. எனவே 1000 அனாதைப் பிள்ளைகளுக்கான பெரிய இல்லத் தைக் கட்ட தேவனிடம் காத்திருந்தார்)

பெரிய கட்டிடம் கட்டிட பொருளாதாரத்திற்காக முல்லர் 19 மாதங் கள் ஜெபித்துக் காத்திருந்தார். எல்லா நாட்களும் சிறிய தொகைகள் வந்து கொண்டிருந்தன. அவை கர்த்தர் ஜெபத்தைக் கேட்கிறார் என்பதற்கு அடையாளமாயிருந்தன. அவை அவருக்கு உற்சாகத்தையும் அளித்தன. ஏற்ற வேளை யில் பெரிய தொகைகள் வரும் என அவர் நம்பினார். அதற்காக அவர் ஜெபிக்க ஆரம்பித்தார். அனேகக் கிறிஸ்தவர்கள் மூலம் 8000 பவுன்ட் கிடைத்த போது அவர் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அப்போது அவர், "தேவனுக் காகக் காத்திருப்பது மிக விலையேறப் பெற்றது. அப்படிக் காத்திருப்பவர்கள் வெட்கப் பட்டு போவதில்லை. அவர் களது பொறுமையும், விசுவாசமும் நெடுநாட்களாகவும் கடினமாகவும் காணப்படலாம். ஆனால் முடிவில் தேவனை கனம் பண்ணுகிறவர்களை அவர் கனம் பண்ணுவார் என்பதும் அவர்களை வெட்கப்படுத்தமாட்டார் என்பதும் உண்மை. அதிகமான நன் கொடைகளால் என் ஆவி புத்துணர்ச்சி பெற்றாலும் தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்ப்பதில் மிகவும் மகிழ்ச்சியாயிருந்தேன்" என்று எழுதி யிருக்கிறார்.

ஜெப நியதிகள்

தேவனுக்குக் காத்திருப்பதால் நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்று அவர் ஆலோசனை கூறுவார். "தங்கள் நம்பிக்கையை தேவன்மேல் வைக்கிறவர்களின் வேண்டுதல்களை உடனடி கவனிக்கிற தேவனுடைய இருதயம்". ஆயினும் உங்கள் விண்ணப் பங்களின் பதிலைப் பெற்றுக்கொள்ள ஆண்டவராகிய இயேசுவின் தகுதியே அடிப்படை. நீங்கள் உங்கள் தகுதி களையும் நற்செயல்களையும் சாராமல் ஆண்டவராகிய இயேசுவை சார்ந்து கொள்ள வேண்டும். நீங்களும் உங்கள் ஜெபம், உழைப்பு ஆகிய அனைத்தும் அவருக்கு முன்பாக அங்கீகரிக்கப்பட அது ஏதுவாயிருக்கும்.

"நாம் கேட்கிற காரியங்கள் அவரது நாம மகிமைக்காகவும் நமக்கு நன்மை தருபவைகளாகவும் இருக்க வேண்டும்... இறுதியாக நாம் கேட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளு மட்டும் ஜெபிக்க வேண்டும்.

ஜெபிக்க ஆரம்பிப்பது மட்டும் போதாது. குறிப்பிட்ட காலம் வரை ஜெபிப்பதும் போதாது. ஆனால் பொறு மையுடனும் விசுவாசத்துடனும் பதில் கிடைக்கும் வரை ஜெபிக்க வேண்டும். தொடர்ந்து ஜெபிப்பது மட்டுமல்ல தேவன் ஜெபத்தைக் கேட்டுக் கொண்டி ருக்கிறார் என்றும் நிச்சயமாய் பதில் தருவார் என்றும் விசுவாசிக்க வேண்டும்.

1852-ல் முல்லருக்கு மிகப்பெரிய விசுவாச சோதனை நேரிட்டது. அவருக்கு மிகவும் அன்பான ஒரே குழந்தை டைபாயிட் நோயால் பாதிக்கப் பட்டு மரணத் தருவாயிலிருந்தாள். தன் மனைவிக்குப் பிறகு அவளை தன் உலகச் சொத்தாக அவர் வைத்திருந்தார். ஆயினும் சமாதானத்தோடும், விசுவாசத் தோடும் ஜெபித்தார். ஒரு வேளை தேவன் அவளை எடுத்துக் கொண்டால் அது நன்மைக்காகவும், தேவ மகிமைக் காகவுமே என்று அவர் நம்பினார். தேவன் ஜெபத்தைக் கேட்டு சில நாட்களில் அவளை குணமாக்கினார்.

தொடர்ந்து ஒரு பெரிய இல்லத்தைக் கட்டுவதை விட இரு சிறிய கட்டிடங்களைக் கட்டி 1000 பிள்ளைகள் தங்க வைக்க முடிவு பண்ணி அவை 1857-ல் திறக்கப்பட்டன.

ஒருமுறை வெப்பத்திற்காக பயன்படுத்திய கொதிகலன் பழுதடைந் தது. மிகுந்த குளிர்காலமாயிருந்தபடி யால் குழந்தைகள் பாதிக்கப்படுவார் களே என்ற கரிசனை அவருக்கு ஏற்பட்டது. புதிய கலம் அமைக்கப் பல வாரங்கள் ஆகலாம். இந்த பாரத்தையும் முழுவதுமாக தேவனிடம் ஒப்புவித்து விட்டு கொதிகலத்தைப் பழுது பார்க்க வேலையாட்களை ஒழுங்கு பண்ணி னார். வடகாற்று அதிகக் குளிரற்றதா யிருக்கவும் வேலையாட்கள் விரைவில் வேலையை முடித்துவிடும் படியாகவும் ஜெபித்தார். குளிர்ந்த வடகாற்று மெல்லிய தென்காற்றாக வீசியது. வேலையாட்களும் இரவு முழுவதும் வேலைசெய்து பழுது பார்க்கும் பணியினை முடிக்கும் மனதை தேவன் கொடுத்தார். பிள்ளைகளின் குளிர்கால பிரச்சனை முடிவுற்றது.

ஆவியானவரின் அசைவு

1859-ல் ஒரு விசேஷித்த ஆவியின் அசைவாடுதல் அனாதை பிள்ளைகள் மத்தியில் ஏற்பட்டது. 120 பெண் குழந்தைகளில் 63 பேர் ஒரே மாதத்தில் மனமாற்றமடைந்தனர். இன்னொரு முறை 200 பிள்ளைகளில் எழுப்புதல் ஏற்பட்டது. அவர்களில் அனேகர் மறு பிறப்பு அடைந்தனர். 1872-ல் அம்மை நோயினால் சில பிள்ளைகளும் பணி யாட்களும் மரித்தனர். தேவ கிருபை யால் 700 பிள்ளைகள் விசுவாசிகளாக மாறினர்.

வருடங்கள் செல்லச்செல்ல தேவன் முல்லரை அதிகமதிகமாக ஆசீர்வதித்தார். எந்த நெருக்கடிகளும் அந்நாட்களில் ஏற்படவில்லை. 1862-ல் மூன்றாவது இல்லம் ஆரம்பிக்கப்பட்டு அதில் 2000 குழந்தைகள் தங்க வைக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

பட்டனர். பின்பு நான்காவது ஐந்தாவது இல்லங்கள் கட்டப்பட்டு 2050 குழந்தைகள் பராமரிக்கப்பட்டனர். அந்த வேளையில் பிள்ளைகளை கவனிக்க உதவியாட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. எனவே முல்லரும் மனைவியும் ஒருமுறைக்குப் பதிலாக மூன்றுமுறை ஜெபிக்க ஆரம்பித்தனர். தேவன் ஜெபத்தைக் கேட்டார்.

இல்லத்தை சந்திக்க வந்தவர்கள் அதின் சுத்தம், ஒழுங்கு, பிள்ளைகளின் ஆரோக்கியம், சந்தோஷம் ஆகியவற்றால் மிகவும் ஆச்சரியமடைந்தனர். அனேக பிள்ளைகளின் பெற்றோர் ஆரோக்கிய மற்றவர்களாகவும், இளம் வயதிலேயே மரித்துப் போன சூழ்நிலையிலும், இங்கு அவர்கள் குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடனிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நாட்களிலெல்லாம் முல்லருக்குத் தனிப்பட்ட சொத்து வருமானம் இருக்கவில்லை. அவர் தமது தேவைகளுக்காக ஜெபித்தபோது தேவன் அவற்றை பூர்த்தி செய்தார். அவர் விசுவாச வீரராகவும், ஜெப வீரராகவும் இருந்தார். ஆயினும் கடின உழைப்பாளியாகவும் நாம் எதிர்பார்க்க முடியாத அளவிலான பணிகளைச் செய்கிறவராகவும் வாழ்ந்தார். "அவர் ஜெபிக்கும் போது தேவனே எல்லாவற்றையும் செய்வார் போல் தோன்றும். ஆனால் கடின உழைப்பும் வெற்றியும் அவர் கரத்திலிருந்தன" என்று மக்கள் அவரைக் குறித்து கூறும் அளவுக்கு அவரது ஜெப வாழ்வும் உழைப்புமிகுந்தன.

அவர் காலத்தில் அவர் மிஷனெறி பணிகளுக்காக ஒரு மில்லியன் டாலர்கள் கொடுத்துள்ளார். அவர் வினியோகித்த வேதபுத்தகங்கள், சுவிசேஷ பிரதிகள், சுவிசேஷ துண்டுப் பிரதிகள் போன்ற வற்றின் மூலம் ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டனர்.

முல்லரின் சிறப்பான இல்ல ஊழியம் வெற்றிபெறக் காரணம் அவர் தாழ்மையுடன், 'ஆண்டவர் பணியை ஆண்டவரது முறைப்படி செய்ததே' என்பதாகும். தன்னை வழிநடத்த ஆண்டவரை மட்டுமே அவர் தலைவராக கொண்டிருந்தார். விசுவாசம், ஜெபம் ஆகியவற்றின் மூலம் தேவனுடைய வல்லமையினை வெளிப்படுத்த நம்மால் முடியும் என்று அவர் நிரூபித்தார்.

நாம் கேட்கிற கரியங்கள் அவரது நாம மகிமைக்காகவும் நமக்கு நன்மை தருபவைகளாகவும் இருக்க வேண்டும்... இறுதியாக நாம் கேட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுமட்டும் ஜெபிக்க வேண்டும்.

ஏழு முக்கிய ஜெபக் குறிப்புகள்
Seven major prayer focuses

1. அவிசுவாசிகள் இரட்சிப்படையும்படி ஜெபிப்போம்

தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு அவற்றை அறிக்கையிட்டு ஆண்டவராகிய இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் படியாகவும், அவர்கள் இருதயங்கள் திறக்கப்படும்படியாகவும் பாரத்தோடு ஜெபிப்போம். உலகின் அத்தனை மக்களும் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பினைப் பெறவும், வேத வாக்கியம் அவரவர் மொழியில் கிடைக்கப்பெறவும் ஜெபிப்போம் (மத்.9:37-38, 24:14; 2 பேதுரு 3:9; அப்.26:18, ரோமர் 10:1)

2. தேசத்தின் ஆவிக்குரிய எழுப்புதலுக்காக

ஆண்டவர் சபையையும் தேசத்தையும் எழுப்புதல் அடையச் செய்து அவரது மகத்துவத்தையும், மேன்மையையும் அறியச்செய்யும்படி ஜெபிப்போம். தேசத்தின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேசம் க்ஷேமமடையவும் ஜெபிப்போம். (2நாளா.7:14, தானி.9:18-19, சங்.85:6, ஆபகூக் 3:2, அப்.37:41)

3. போதகர்கள் மற்றும் சபைகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்பட ஜெபிப்போம்

சபை பாகுபாடு, உபதேச வேறுபாடு போன்ற பிரிவினைகள் அகன்று ஊழியர்கள் ஒருவரையொருவர் நேசிக்கவும், சேர்ந்து ஜெபிக்கவும், ஊழியம் செய்யவும் ஜெபிப்போம். (யோவான் 17:20,23; சங்.133:1; எபே.4:3,6.)

4. குடும்பங்களுக்காக ஜெபிப்போம்

ஆண்டவர் தாமே ஒவ்வொரு திருமண உறவுகளையும், குடும்பங்களையும் இணைத்து, நிலைநிறுத்தி பலப்படுத்தி ஆசீர்வதிக்கும்படி ஜெபிப்போம். கிறிஸ்து சபையை நேசிக்கிறது போல கணவர்கள் தங்கள் சொந்த மனைவிமாரை நேசிக்கவும், மனைவிகள் கணவன்மாருக்கு அடங்கியிருந்து அவர்களை கனப்படுத்தவும், பெற்றோரின் இருதயங்கள் பிள்ளைகளின் மீது திருப்பப்பட்டு அவர்களில் அன்புகூரவும் அவர்களை தேவ பயத்தில் வளர்க்கவும் ஜெபிப்போம். பிள்ளைகள் பெற்றோரை கனம்பண்ணி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க ஜெபிப்போம். (ஆதி.2:24, யோசு.24:25, சங்.127:3-5, மல்கி.4:6, எபேசி.5:22-23; 6:1-4)

5. இனவேறுபாடுகள் அகன்று போக ஜெபிப்போம்

தேவன் நமது தேசத்தை இன வெறியிலிருந்து பாதுகாக்கவும், சபை இனவேறுபாட்டிற்கு எதிராக நிற்கவும் ஜெபிப்போம். மொழி, இனம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளால் வரும் சண்டைகள், பயங்கரவாதம் போன்றவைகளுக்கு எதிராக தேவன் சபையை பயன்படுத்தட்டும். சபை தன் அன்பின் மூலமாக அனைத்து மக்களையும் அங்கீகரித்து வழிகாட்ட ஜெபிப்போம். (ரோமர் 10:12,13; கலா.3:28; அப்.10:28, 34, 35; யோவா.7:24; 1யோவா.2:9; யாக்.2:9; வெளி.7:9)

6. ஜீவனுக்கு மதிப்பு கொடுக்கவும், அனைத்து நிலையிலும் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்

கருவிலிருந்து, முதியோர் வரையிலுமுள்ள ஜீவன் பாதுகாக்கப்படவும், கருக்கலைப்பு சட்டமாக்கப்படாமலிருக்கவும் ஜெபிப்போம் (சங்.139:13-16; எரே.1:5; நீதி.24:11; உபா.21:8-9)

7. அரசாங்க அதிகாரிகளுக்காக ஜெபிப்போம்

அதிகாரிகளுக்கு தேவன் ஞானம் கொடுத்து அவர்கள் ஞானமுள்ள தீர்மானங்கள் எடுக்கவும், நீதி, நியாயமாய் இரக்க சிந்தையோடு நாட்டை ஆளுகை செய்யவும் ஜெபிப்போம். (மீகா.6:8; 1 தீமோ.2:1-2; ரோமர் 13:1; 1 பேதுரு 2:17; தீத்து.3:1-2)

ஒவ்வொரு முறையும் நீங்கள் விண்ணப்பம் பண்ணுவதற்கு முன்பாக சற்று நேரம் அமைதியாயிருங்கள். தேவனை அவருடைய மகிமையில் ஆராதியுங்கள். அவர் எதையெல்லாம் செய்யக் கூடியவர் என்று எண்ணிப் பாருங்கள். அவரால் மீட்கப்பட்ட பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்பதில் அவர் பிரியப்படுகிறார். கிறிஸ்துவிடம் எந்த இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்? என்னென்ன வாய்ப்புகளைக் பெற்றிருக்கிறீர்கள்? என்றெல்லாம் எண்ணிப்பார்த்து, தேவனிடம் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள். – ஆண்ட்ரூ முர்ரே

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

Book Packets contains periodicals

To

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason